# சுய சேகரிப்பு [உங்கள் மாதிரியை நீங்களே எடுத்தல்] இப்போது கருப்பை வாய்ப்பகுதித் திரையிடல் [screening] பரிசோதனைக்கான ஒரு விருப்பத் தேர்வாகும்.

கருப்பை வாய்ப் புற்றுநோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இதனைச் செய்வது எளிது!




Cancer Council SA

**நீங்கள் 25-74 வயதுடையவராகவும், பாலியல் ரீதியாக எப்பொழுதும் ஈடுபட்டுக்கொண்டுவருபவராக இருந்தால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கருப்பையின் வாய்ப்பகுதித் திரையிடல் பரிசோதனையைச் செய்துகொள்ளுங்கள்.**

ஒரு பொது மருத்துவர் அல்லது செவிலியரால் எடுக்கப்பட்ட மாதிரியைப் போலவே சுய சேகரிப்புத் துல்லியமானது.

பொது மருத்துவரின் தனி மருத்துவமனையில் , வழக்கமான முறையில் தனிமையில் திரைக்குப் பின்னால் அல்லது குளியலறையில் உங்கள் சொந்த உயிரணுக்களின் சிறு மாதிரியை எடுத்துக் கொள்ளலாம்.
இந்தச் சோதனை இலவசம், எளிதானது மற்றும் நம்பகமானது.

தகவல் மற்றும் ஆதரவுக்கு **கேன்சர் கவுன்சிலை 13 11 20 இல் அழையுங்கள்**
**cancersa.org.au என்ற வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்**

**Tamil | தமிழ்**

Cancer Council SA

நீங்கள் கருப்பை வாய்ப் பகுதித் திரையிடல் செய்ய வேண்டியிருந்தால், இப்போது உங்கள் சொந்த யோனியிலுள்ள உயிரணுவின் மாதிரியைப் பஞ்சுத் துடைப்பான் (swab) மூலம் எடுக்கலாம். எடுத்த மாதிரியில் ஹியூமன் பாபிலோமாவைரஸ் (HPV) இருக்கிறதா என்று பரிசோதிப்பார்கள். கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக HPV ஐக் கண்டறிவது உங்கள் சிறந்த பாதுகாப்பாகும்.

**சுய சேகரிப்பு பற்றி உங்கள் பொது மருத்துவர், செவிலியர் அல்லது பழங்குடியின சுகாதாரப் பணியாளரிடம் கேளுங்கள்.**

## நான்கு இலகுவான படி நிலைகளில் சோதனை செய்வது எப்படி:

***படி நிலை 1***



- சிவப்பு மூடியைத் திருப்பி, துடைப்பானை (swab) வெளியே இழுக்கவும்.
- துடைப்பானைப் பார்த்துச் சிவப்பு அடையாளத்தைக் கவனியுங்கள்.

***படி நிலை 2***



- வசதியான நிலையில் அமருங்கள்.
- சிவப்பு அடையாளத்தில் செருகுவதை நோக்கமாகக் கொண்டு உங்கள் யோனிக்குள் துடைப்பானைச் செருகவும்.

***படி நிலை 3***



- துடைப்பானை ஒன்று முதல் மூன்று முறை மெதுவாக சுழற்றவும்.

***படி நிலை 4***



- துடைப்பானை அகற்றி மீண்டும் குழாயில் வைக்கவும்.
- அதை உங்கள் பொது வைத்தியர், செவிலியர் அல்லது சுகாதார ஊழியரிடம் திருப்பிக் கொடுக்கவும். இரண்டு வாரங்களில் உங்கள் முடிவுகளுக்கு கிளினிக்கைத் தொடர்பு கொள்ளவும்.